# போர்வாள்

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார் | தனி இதழ் அணா $1\frac{1}{2}$
மா. இளஞ்செழியன், B. A. (Hons.) | வெளிநாடு அணா 2

வாள் 1 | சென்னை 25—10—47 சனிக்கிழமை | வீச்சு 11


# அலைகடல் அழைக்கிறது!

(ந. காசிராஜன்)

"கற்பகம், நீ போய் வா நான் இங்கு நிற்கிறேன்."

'ஏன், நீங்கள் வரவில்லையா?'

"நான் வரவில்லை. நீ போய் வா."

"ஹாஹூம், நான் போகவில்லை. நீங்கள் வராதபொழுது ...."

"என்ன கற்பகம், சொன்னதையே திருப்பிச்சொல்கிறாய்? காரியினுக்குப் போகவேண்டுமென்று எவ்வளவு ஆசையுடன் வந்தாய் நீ போய் வா. நான் இங்கேயே நிற்கிறேன்."

"நீங்கள் வராமல் நான் மட்டும் எப்படிப்போவது? நீங்களும் வரவேண்டுமென்றுதானே வந்தீர்கள்."

"கற்பகம், நான்தான் வரமுடியாதே!"

இப்பேச்சு எனக்கும் என் ...வின் ஒளி என்று நான் எண்ணிய கற்பகத்திற்கும் கோயிலுக்குமுன் நடந்தது. என்னுடைய கடைசிச் சொற்கள் அவள் உள்ளத்தை ஊடுருவித் தைத்திருக்கவேண்டும். இல்லாவிடில் அவள் முகம் இப்படிச் சிவந்திருக்காதே!

கற்பகம் என் கல்லூரித் தோழி. நான்காண்டுகள் ஒன்றாகப் படித்தோம். நான் முதன் முதலில் அவளை நாங்கள் படித்த கல்லூரியின் வாசலிலே தான் கண்டேன். அப்பொழுது கல்லூரியிலே இடம் கிடைக்க வேட்டையாடிய படலம். நான கல்லூரிக்குள்ளே நுழையும் சமயம் ஒரு கார் என் சமீபமாக வந்து நின்றது. அதிலிருந்து இறங்கினாள் கற்பகம். தற்செயலாகத் திரும்பிய என் கண்களும் அவள் கண்களும் சந்தித்தன. அவளுடைய கரிய கண்கள் மருண்டன. புருவத்தை வில்லாக வளைத்து கண் அம்பை

## அவர்களைக் கேளுங்கள்.

30 லட்சம் மக்களைக் கொண்ட நார்வேயும் அயர்லாந்தும் தனி நாடுகளாக இருக்கும் போது,

37 லட்சம் மக்களைக் கொண்ட டென்மார்க் தனி அரசாக இருக்கும் போது,

70 லட்சம் மக்களை உடைய ஆஸ்திரேலியா தனி ஆட்சி செலுத்தும் போது,

95 லட்சம் மக்களையுடைய தென்னாப்பிரிக்கா ஐக்கிய நாடுகளின் சங்கத்தையே மிரட்டும்போது,

1 கோடி மக்களை உடைய ஆப்கனிஸ்தானும் $1\frac{1}{2}$ கோடி மக்களை உடைய துருக்கியும் ஈரானும் தனித் தனி அரசுகள் அமைத்து தனி வாழ்வு நடத்தும் போது,

4 கோடி மக்கள் தொகை உடைய இங்கிலாந்து பெரியதோர் வல்லரசாக விளங்கும் போது,

கிட்டத்தட்ட 6 கோடி மக்களைத் தன்னகத்தே கொண்ட திராவிடம் தனிக் குடியரசாக இருக்க முடியாதென்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்!

ஏன் முடியாதென்பது நமக்குத் தெரியவில்லை. அவர்களையே கேளுங்கள்.

என்மீது அப்பொழுதே தொடுத்துவிட்டான். அவள் செவ்வதரம் துடித்தது. ஏதோ கேட்க எண்ணுகிறுள் என்று எண்ணினேன். அடுத்த கணம் "ஆபீஸ் ரூம் எங்கிருக்கிறது?" என்று என்னிடம் கேட்டாள். கணீர் என்ற குரல், ஆனால் அதிலே ஒரு துடி துடிப்பு இருந்தது. "மேலே இருக்கிறது; நான் அங்குதான் போகிறேன்" என்று பதிலுரைத்துவிட்டு கல்லூரிக்குள் நுழைந்தேன். அவள் என்னைப் பின் தொடர்ந்தாள். அவள் பின்னல் வருகிறுள் என்ற உணர்ச்சி என்னை இன்பக் கடலில் அழுத்தியது. நான் அன்று நடந்து செல்லவில்லை; இன்பக் கடலில் முழுகி முழுகி நீந்திச் சென்றேன்.

வாசலிலே கண்ட வனிதையை என் வகுப்பில் மறுபடியும் சந்திப்பேன் என்று நான் எண்ணவில்லை. நான் எடுத்திருந்த பாடங்களையே அவளும் எடுத்திருந்தாள். ஒரே வகுப்பில் தான் படித்துக் கொண்டிருந்தோம். ஆனல் அவளும் நானும் நெருங்கிப் பழகினதில்லை. அவளையறியாமல் நான் அவளுடைய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருப்பேன். அவளும் என்னை கவனித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஏன்? அடிக்கடி என்மீது பாய்ந்த அவளுடைய கூரிய பார்வை அதைத்தான் உணர்த்திற்று. இவ்விதமாக இரண்டாண்டுகள் ஓடி மறைந்தன. இண்டர் பரீட்சையை எழுதி முடித்தோம்.

சர்க்காரின் காருண்யம், ஆதித்திராவிடன் என்ற பெயரின் மகிமை இவைகளைக்கொண்டு உபகாரச் சம்பளம் பெற்று பி. ஏ. படித்து முடித்துவிட வேண்டு மென்றெண்ணினேன். நான் இண்டரில்வாங்கிய மார்க்குகள் எனக்கு அதிக உதவி செய்தன.

பி. ஏ. வில் சேர்வதற்காக நான் அனுமதிச் சீட்டைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கும் போது கற்பகம் எங்கள் கல்லூரி அலுவல் அறைக்குள் வந்தாள். அவளும் பி. ஏ. வில் சேர்வதற்காகத்தான் வந்திருக்கவேண்டும். அன்றுதான் இரண்டாம் முறையாக நாங்கள் பேசினேம். கற்பகம் தான் ஆரம்பித்தாள். "உங்கள் மார்க்குகளைப் பார்க்கலாமா" என்று என் கையிலிருந்த காகிதத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டாள். 'தாராளமாக' என்று சொல்லிக்கொண்டே அக் காகிதத்தை அவளிடம் கொடுத்தேன். அதைப் பார்த்ததும் அவளுடைய உதட்டிலே புன்னகை அரும்பிற்று. "நம்மிருவருடைய மொத்த மார்க்கு ஒன்றுக இருக்கிறதே" என்றுள் ஆச்சரியத்துடன். "அப்படியா" என்று ஒரு துள்ளு துள்ளினேன். "ஆம் இருவருடைய மொத்த மார்க்கும் ஒன்றுக இருக்கிறது. எவ்வளவு ஒற்றுமை!" அவளுடைய களிப்பில் நானும் கலந்துகொண்டேன்.

ஜூனியர் பி. ஏ. வில் படித்து கொண்டிருந்தோம். ஒரு நாள் தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பாடத்திலே ஓர் செய்யுளடி வந்தது. 'ஓராவிற்கு இருகோடு முளைத்தாலென்ன' என்ற அந்த அடியை ஆசிரியர் படித்தபோது கற்பகம் என்னைத் திரும்பிப் பார்த்தாள். என்னையறியாமல் நானும் அவள் பக்கமாகத் திரும்பிப் பார்த்தேன். எங்கள் கண்கள் சந்தித்தன. அவள் அதரம் "ஓராவிற்கு இருகோடு" என்று சொல்வது போல் துடித்தது. என் உள்ளம் தடுமாறியது. இந்த ஒற்றுமைகளை யார் கவனிக்கிறுர்கள்... படிப்பில் மட்டும் ஒற்றுமை... இருந்து என்ன பிரயோஜனம்... நான் ஆதித்திராவிடன்; அவள் ...............? நான் பிறர் உத... யால் படிப்பவன், வாழ்பவன்... அவள்...........?

தமிழ் வகுப்பிலே அவள் என்னைப் பார்த்த பார்வை என்னை... குழப்பிவிட்டது. அன்பு கனிந்த... அவள் பார்வைக்கு, காத... பொங்கியெழுந்த அவள் பா... வைக்கு நான் ஈடு கொடுக்கமுடி... யுமா? நான் ஆதித்திராவிடன்... தாழ்ந்த சாதி, பிறப்பு என... மகத்தான பிரிவால் தாழ்ந்தவன்... போன பிறப்பில் செய்த பா... காரியத்தின் காரணமாக தாழ்ந்த... குடியிலே, வறுமைக் குடியிலே... பிறந்தவன்! நான் குடிசையிலே... வாழப் பிறந்தவன்; நான் மா... ளிகையை அண்ணாந்து பார்க்க... லாமே தவிர, பார்த்து பெரு... மூச்சு விடலாமே தவிர, என்... னைப் போன்ற மனிதர்கள்... வாழும் அம் மாளிகைகளில் உ... செலலவும் தகுதியற்றவன்... நான் என்ன செய்யமுடியும்... 'நான் சூத்திரன்' என்று ஆ... திரம் கொள்ளமுடியுமே த... அப்பெயரை ஒழிக்க என்ன... முடியுமா? ஆதித்திராவிட... என்று சொல்லி இழிந்த இன... தார் என்று கூறுபவர்களை... கண்டு கோபம் கொள்ளமு... யுமே தவிர, "இந்நாட்டில்... பண்டை நாட்களில், திராவிட... கள்தான் வாழ்ந்தனர். ஆகவே... இந்நாட்டில் வாழும் உரிமை... முழுவதும் அவர்களுக்குத்தா... உண்டு. அவர்களை இழிந்த... இனத்தார் என்று கூறுவது எ... வளவு மடத்தனம்" என்... அவர்களிடம் கூறமுடியுமா?...

ஏன் முடியாது?........

நான் பிறந்த நாட்டிலே, என்... முன்னேர்கள் செழித்தோங்கி...

(11-ம் பக்கம் பார்க்க)

ல் அரங்கம் :

# ராவிடம் வேறு! ஆரியம் வேறு!

## அழிந்த இனமல்ல! திராவிடம் இன்றும் வாழும் இனமே!

### கம்யூனிஸ்டுக்கு திராவிடக் கழகத்தார் மறுப்புரை.

[சென்ற இதழில், திராவிட நாட்டுப் பிரிவினை தேவையில்லை என்னும் கருத்துடைய கட் டுரை ஒன்றை கம்யூனிஸ்ட் நண்பரொருவர் தீட்டியிருந்தார். இதோ திராவிடக் கழகத்தவர் ஒருவர் அதற்குத் தரும் மறுப்புரை. படித்துவிட்டுச் சொல்லுங்கள், டில்லி தர்பார் இனியும் நடக்கலாமா—நடக்கவிடலாமா என்று.]

ராவிடப் பாசறையின் புத் புதிய ஆயுதமாகிய "போர் ", போன வாரம், பொது டைமை நண்பர் ஒருவர் வீசிய குண்டுகளை உடன் ண்டு வந்தது. வெடி குண்டு என்றதும் நான் பயந்து னேன் முதலில். என்ன ஏதோ என்றெண்ணி ன். மிகவும் அச்சத்தோடும், நிமிஷத்தில் குண்டு வெடிக் ா என்ற ஐயத்தோடும்தான் கில் நெருங்கினேன். ஆனால் ங்கி நின்று சோதனையிட்ட அது வெடிகுண்டு அல்ல ும் ஈயக்குண்டு என்று ந்தது. செ! இவ்வளவு என்று சப்பிட்டுவிட்டது க்கு.

வடிகுண்டு என்று நான் க எண்ணி ஏமாந்த ஈயக் டைத் தட்டித் தட்டிப் ததில் ஏழு காரியத் துண்டு கீழே விழுந்தன. அவற்றை ொன்றாக உங்கள் முன் வைக்கிறேன். பார்த்த உடனே தெரிந்துகொள்வீர்கள் அவை அத்தனையும் வெறும் காரீயம், நல்ல ஈயம்கூட அல்ல என் பதை.

**(1) திராவிடர்கள் இருந்தது சுமார் கி. மு. 3000-ல். இன்று நாம் வாழ்வது கி. பி. 20-வது நூற்றுண்டு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலா கின்றன திராவிடன் வாழ்ந்து. இவ் வளவு காலத்திற்குப் பிறகு, எத் தனையோ மக்கள் கலப்பு ஏற்பட்ட பிறகு அன்று இருந்த திராவிடத்தை அளவுகோலாகக்கொண்டு இன்றைய மக்களை அளந்து பார்ப்பது சரி யல்ல.**

என்ன அருமையான வாதம்! திராவிடர்கள் இருந்தது கி. மு. மூவாயிரத்திலாம்; இன்று நாம் வாழ்வது இருபதாம் நூற்றுண் டிலாம். எனவே ஆரியர்—திரா விடர் என்ற அளவுகோல் சரி யில்லையாம். எவ்வளவோ கல ப்பு ஏற்பட்டு விட்டதாம். எத் தனையோ மக்கள் கூடிக் கலந்து புது உருவமும் பண்பாடும் பெற்று விட்டனராம். எனவே பழைய காலத்தில் இருந்ததை வைத்துக்கொண்டு இன்று இனப் பிரிவினை செய்ய முடியா தாம்! சொல்கிறுர் பொது வுடைமை நண்பர் கொஞ்சமும் கூச்சமில்லாமல். சொல்வது மட்டுமல்ல. இவற்றை எல்லாம் நாம் நம்ப வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறுர். எவ்வளவு நெஞ்சழுத்தம் அவருக்கு!

திராவிடர்கள் இருந்தது கி. மு. 3000-ல் என்கிறுரே, இன்றுள்ள நாம் திராவிடர்கள் அல்லவா? தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் நான்கை யும் தாய்மொழியாகக் கொண்ட வர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? அல்ல என்றுல் எந்த ஆதாரத் தைக் கொண்டு? தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம், முதலிய மொழிகள் திராவிடக் குடும்பத் தைச் சேர்ந்தன என்பதையும்,

# ஆரியர் சேர்க்கையால் வந்தது கேடு

இவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் திராவிடர்கள் என்பதையும், சமஸ்கிருதம் ஆரிய மொழி என்பதையும், அதைத் தாய் மொழியாய்க் கொண்டவர்கள் ஆரியர்கள் என்பதையும் நான்காவது வகுப்பில் வாசிக்கும் சிறுவனும் அறிவானே; எந்த வரலாற்றுப் புத்தகமும் தெரிவிக்குமே! H.G. வெல்ஸ், ரமேஷ் சந்திரடட், சர் ஜேம்ஸ் மர்ரே, ராதா குமுத முகர்ஜி கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு, சர் வில்லியம் ஹண்டர், ரகோசின், பி. டி. சீனிவாச அய்யங்கார், மறைமலை யடிகள், பி. சிதம்பரனார், கே. என். சிவராஜ பிள்ளை, ந. சி. கந்தையா, கில்பர்ட் ஸ்லேட்டர், சர் ஹாரி ஜான்ஸ்டன், ராலின்சன் போன்ற சிறந்த வரலாற்று அறிஞர்களின் நூல்களைப் புரட்டுவதற்கு சிதறிக் கிடக்கும் ஜன சக்தியை உருவாக்கும் பெரும் பணியில் ஈடுபட்டுவிட்ட நம் கம்யூனிஸ்டு தோழருக்கு நேரமில்லை என்றாலும், ஏதேனும் ஒரு ஆரம்பப்பள்ளி சென்று அங்குள்ள யாரேனும் ஒரு மாணவனின் (அவன் ஆரிய மாணவனாயினும் சரியே), சரித்திரப் புத்தகத்தை வாங்கிப் பார்க்கட்டும். புத்தகம் முழுவதும் படிக்கும் சிரமம் கூட வேண்டியதில்லை தோழருக்கு, முதல் மூன்று பக்கங்களைப் புரட்டினாலே போதும், இதற்கான ஆதாரங்கள் ஏராளமாகக் கிடைக்கும். கி. மு. 3000-ல் இருந்தோர் மட்டுமேல்ல, இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் நடமாடும் நாமும் திராவிடரே என்பதை ஐயந்திரிபிற்கு இடமின்றி அந்த மூன்று பக்கங்கள் அவருக்கு உணர்த்திவிடும். தோழர் இதனைச் செய்வாரா?

அல்லது, காரல் மார்க்ஸ் இது பற்றி என்ன சொல்கிறார் என்பதுதான் எனக்குத் தெரிய வேண்டுமே தவிர, யாரோ சில "பூர்ஷ்வாக்கள்" எழுதிய சரித்திரப்புத்தகங்களை-பூர்ஷ்வா இலக்கியங்களை நான் ஏன் படிக்க வேண்டும் என்று சொல்லிவிடுவாரா?

வடநாட்டைப் பொறுத்த வரையில் ஆரியமும் திராவிடமும் கலந்து விட்டன. கலந்ததன் விளைவாகவே வடநாட்டில் வழங்கிய திராவிட மொழி, வடசொற்களை ஏற்று, வடவெழுத்துகளைத் தழுவி, சமஸ்கிருத உருவம் பெற்று, பெற்றதன் விளைவாகப் பல மொழிகளாய்ச் சிதைந்தன. அங்கு வாழ்ந்த திராவிடரும் ஆரியர் கூட்டுறவால், திராவிடப் பண்பு கெட்டு, ஆரியக் கலப்புற்று, ஆரிய திராவிடக் கலப்பு இனங்களாக மாறினர். இரண்டு இனங்களிடையேயும் கலப்பு ஏற்பட்டுவிட்டது என்று நம் கம்யூனிஸ்டு தோழர் கூறுவது வடநாட்டைப் பொறுத்தவரையில்தான் உண்மை. தென்னாட்டில் — திராவிடத்தில் — தமிழகம், மலையாளம், கன்னடம், ஆந்திரம் இவை நான்கும் சேர்ந்த பகுதியில் இந்தக் கலப்பு நேரவே இல்லை. நேர்ந்ததாகக் கூறுவது அறியாமை.

தென்னாட்டில் நிகழ்ந்த ஆரியப் படையெடுப்பு திராவிடம் அல்லது பழந்தமிழ் மொழியை-ஆரியம் வருதற்குமுன் இருந்த தமிழ்மொழியை—இன்றுள்ள தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு முதலான திருந்திய திராவிட மொழிகளுக்கும், கூண்டு கோய் முதலிய திருந்தாத திராவிட மொழிகளுக்கும்

தாய்மொழியான மூலமொ
யை—ஒரே மொழியைக் கு
துப் பல மொழிகளாக்கிற்று
யம். திராவிடர் என்ற
கட்டுக் கோப்பான இன
யிருந்த மக்களை தமிழர் தெ
கர் முதலான பல பிரிவுகள்
கிற்று ஆரியம். பழந்தமிழ்
டின் (திராவிடத்தின்) ஒரு ப
யில் வழங்கிய தமிழுடன்
ம் கலந்ததன் விளைவாக,
பகுதியில் வழங்கிய த
தெலுங்காயிற்று. அவ்
ணமே மற்றொரு பகுதித் த
டன் ஆரியம் கலந்து வந்த
கன்னடமாயிற்று. மலையா
பிறந்ததும் இதுபோலவே.
தக் கேட்டினை ஆரியம் வி
ததே தவிர, இன்றும், ஆரிய
திராவிட மொழிகளும், க
னிஸ்டு தோழர் கருதுவது
இரண்டறக் கலந்து விடவி
இன்றும் ஆரியம் (சமஸ்கிரு
வேறுதான்; திராவிடம் (
முதலான மொழிகள்)
தான்; ஆரியர் (சமஸ்கிரு
தாய்மொழியினர்) வேறுதா
திராவிடர் (தமிழ் தெலுங்கு
லிய மொழிகளைத் தாய் மொ
யாகக்கொண்டவர்) வேறுதா

தமிழ்நாட்டுப் பிராமணர்
பிழைப்பு கருதியும், இருக்
இடம் கருதியும், சூழ்நிலை
யும், பிற பல காரணங்களா
தமிழ் கற்கின்றனர்; தமிழ்
கின்றனர்; தமிழர் என்று
சமயம் சொல்லிக் கொள்ள
செய்கின்றனர். ஆனால் அத
எல்லாம் அவர்கள் தமிழ
ஆகார். அதுபோலவே,
ங்கு நாட்டுப் பிராமண
தெலுங்கு கற்பதால் மட்
தெலுங்கர்கள் ஆகார். ம
ளம் பேசும் பார்ப்பனர்
கன்னடம் பேசும் பார்ப்ப

# தமிழ் பேசும் பிராமணர் தமிழர் ஆகார்

ம் மலையாளிகள் கன்னடர்
ஆகமாட்டார்கள். பல்வேறு
களில் வாழும் யூதர்கள்
க்கை வசதி கருதி, வாணிப
கருதி அந்தந்த நாட்டு
ழி பயின்றாலும் எப்படி
ந்த நாட்டுமக்கள் ஆகமாட்
களோ அப்படித்தான் பிரா
ர்கள் தமிழ் முதலிய திரா
மொழிகளைப் பேசுவதா
ய திராவிடர்கள் ஆகமாட்
கள். ஆங்கில மொழியினை
லேயரும் வியக்கும் வண்
தான் பேசுகிறார் சர் ஆற்
. இராமசாமி முதலியார்.
ல் மட்டும் அவர் ஆங்கில
த்தவராக ஆய்விடுவாரா?
கிலச் சொற்பொழிவில்
ளி நாப் புலவரென விருது
று விளங்கிய மகாகனம்
திரியார் ஆங்கிலம் பேசிய
யே ஆங்கிலேயர் ஆய்விடு
? சிறந்த ஆங்கில நூல்களை
ிய முறையில் எழுதிக்
கும் பண்டித நேரு அதனா
ப ஆங்கிலர் ஆகிவிட முடி
அல்லது தமிழ் மொழி
தமிழரினும் பார்க்க மிக
படித்த ஜி. யு. போப்,
கி முனிவர், கால்டுவெல்,
ற மேனாட்டறிஞர்கள்
ஒரு காரணத்தாலேயே
ஆகிவிட முடியுமா? முடி
என்றுதான் எவரும் கூறு
அது முடியாதாயின் தமிழ்
பிராமணர் தமிழராவ
தெலுங்கு எழுதும் பிரா
தெலுங்கராவரோ, இவை
திராவிட மொழிகளைப்
எழுதி, அவற்றால் வாழும்
ணர் திராவிடராவரோ எங்
இயலும்? இயலும்
யார் சொல்ல முடியும்?
ால் அது அறிவுக்குப்
ந்துமா? நண்பர் ஆர அமர
துப் பார்க்கட்டும்.

இன்றுங்கூட, பிராமணர்கள், தாம் வாழும் அந்தந்த வட்டாரத்து மொழிகளை அவசியம் கருதிப் பேசினாலும், அவர்களுடைய உள்ளம் ஆரிய மொழிக்கே அரியணை தருகிறது என்பதை எவரோ அறியார்? வடமொழியே தம் தாய்மொழி என்றும், அதற்கு ஆக்கம் தேடுவதே தம் பிறவிப் பயன் என்றும் அவர்கள்—அவர்கள் என்றால் சாதாரணப் பார்ப்பனர் அல்ல; சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி. ஆர். வெங்கட்ராம் சாஸ்திரி, சர். என். கோபால்சாமி அய்யங்கார்; சர். சி. பி. ராமசாமி அய்யர், சி. ராஜகோபாலாச்சாரி, கல்கி போன்றவர்கள்—உளமார எண்ணுவதையும், அதற்கேற்பவே பணியாற்றுவதையும் தெரியாதார் யார்? ஏதோ ஒப்புக்கு — திராவிட இனத்தவர் தூற்றுவரே என்ற பயத்தால்—தமிழ் வாழ்க என்று சும்பலில் கோவிந்தா போட்டாலும், வடமொழி என்றால் அவர்களுக்கு ஏற்படும் பற்று, பாசம், அன்பு, அதற்காக அவர்கள் தேடும் செல்வாக்கு, அதற்குச் செலவழிக்கும் பணம் இவற்றில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட தமிழுக்கு அவர்கள் ஒதுக்குவதில்லை என்பதைத் தென்னாட்டுப் பச்சிளங்குழந்தைகளும் அறியுமே! கவி சுப்பிரமணிய பாரதியார்க்கு நினைவுச் சின்னம் எழுப்புவதில் அவர்கட்குள்ள ஆர்வம் கப்பலோட்டிய மறத் தமிழன் நினைவாக ஒரு ஓட்டைக் குடிசையை வேப்பந்தழை வேய்ந்து கட்டும் அளவுக்குக்கூட எழுவதில்லையே, இதற்குக் காரணம்—வெளிப்படையாகவே கேட்கிறேன் — பாரதி ஆரிய இனத்தவர் சிதம்பரனார் தமிழ் இனத்தவர் என்பது தவிர வேறு என்ன?

தென்னாட்டுப் பிராமணர்களுக்கு விவேகாநந்தா கல்லூரியில் உள்ள அக்கரை காந்தைத் தமிழ்ச் சங்கத்திடம் கிடையாதே! திருச்சி நேஷனல் கல்லூரி (பிராமண ஆதிக்கத்தில் உள்ளது) மீது அவர்கட்குச் சுரக்கும் அன்பு பச்சையப்பன் கல்லூரிமீது இருப்பதில்லையே, இது ஏன்? ஆரியர் ஆதிக்கத்தில் உள்ள கல்லூரி ஓங்கவும் திராவிடர் ஆதிக்கத்தில் உள்ள கல்லூரி வீழவும் அவர்கள் காட்டும் மன உணர்ச்சி எதைக் காட்டுகிறது?

பள்ளிக் கூடங்களில் இன்றும் பிராமண மாணவர்கள் சம்ஸ்கிருதத்தையே தம் தாய் மொழியாக—**தமிழுக்குப் பதிலாக**—தமிழின் இடத்தில் நிறுத்துவதையும், மணச் சடங்கு பிணச் சடங்கு முதலிய புனித நிகழ்ச்சிகளையும் அம் மொழியிலேயே நிகழ்த்துவதையும் காணாதவர் எவர்?

இன்னமும் பிராமணர்கள் தம் மொழி இனம் கலை நாகரிகம் கொள்கை கொடுப்பு வினை வேறு என்றும் மற்றவர் தம் மொழி இனம் கலை முதலியன வேறு என்றும் கொள்வது எதைக் காட்டுகிறது?

திருவையாற்று அரசர் கல்லூரியில் பிராமணரும் அல்லாதாரும் ஒன்றாக இருந்து உண்ணவேண்டும் என்று தஞ்சை மாவட்ட ஆட்சிக் கழகம் முடிவு செய்தபோது, அது கூடாது என்று சென்னை ரானடே ஹாலில் மகாகனம் சாஸ்திரிகள் மணியோசை கிளப்பியதும், ஆமாம், வெவ்வேறு

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

25—10—47 சனிக்கிழமை

# நகர சபையே, நெஞ்சுத் துணிவுண்டா ?

ஆங்கில ஏகாதிபத்தியத்தை நடுங்கவைத்த அடலேறு வ. உ. சி. யின் பெயரைச் சென்னையின் கீழ்ப் பகுதிக்குச் சூட்டவேண்டும் என்று சென்னை துறைமுகத் தொழிலாளர்தம் கூட்டம் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது அண்மையில். நல்ல முடிவுதான். ஆனால் நடைமுறைக்கு வருமா என்பதுதான் கேள்வி.

வீரர் சிதம்பரனார் தூத்துக்குடியில் நடத்திய போராட்டம், வைக்கத்தில்தலைவர் பெரியார்நிகழ்த்திய அறப்போரினைப்போலவே, வரலாற்றுப் புகழ் மிக்கது. கறுப்பு நிறம் என்றாலே வெறுத்து ஒதுக்கிய வெள்ளைத் திமிர் மட்டந் தட்டப்பட்டது சிதம்பரனாரால். தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பிய பாவத்திற்காக அவர் சிறை வாய்ப்பட்டதும் கொடுஞ் சிறையில் வெம்பி வதைந்தபோது அவர் செக்கிழுத்துச் சிறுமைப்பட்டதும், ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மை அவரை வாட்டி வதைத்தபோதும் நெஞ்சு கலங்காது அவர் நிமிர்ந்து நின்று போராடியதும் தமிழகம் அறிந்தவையே. அவர் பெயர் சென்னைப் பகுதிக்குச் சூட்டப்படுவது மிகவும் பொருத்தமே. ஆனால் சூட்டுவார் யார் ?

"ஜார்ஜ் டவுன்" என்ற பெயர் இருப்பது ஏகாதிபத்தியம் கோலோச்சிய அக்காலத்திற்குப் பொருத்தமாய் இருக்கலாம். ஆனால் விடுதலைக் கதிரவன் உதயமாய்விட்டதாகக் கூறப்படும் இக்காலத்திற்குப் பொருந்துவதன்று. எனவே உடனடியாக அப்பெயர் நீக்கப்பட்டு **சிதம்பரம் நகர்** எனும் பெயர் வைக்கப்படவேண்டும் என்று துறைமுகத் தொழிலாளர்கள் கேட்பது நியாயமே. ஆனால் நியாயத்திற்குத் தலை சாய்ப்பார் எவர் இருக்கிறார் இங்கு ?

துர்ப்பாக்கியம் மிக்க இந்த நாட்டிலே "நேரு கபே" திறக்க ஆட்களுண்டு; சைனாபஜார் தெருவை "நேதாஜி ரோட்"டாக மாற்ற நகர சபை உண்டு; வடநாட்டுத் தலைவர்கட்கு விழாக் கொண்டாடி வாழ்த்துரைக்க மக்களுண்டு; ஆச்சார்ய கிருபாளனியோ சங்கர்ராவ் தேவோ, சரத் சந்திரபோசோ, பி. சி. ஜோஷியோ எவர் வரினும் 'வாழ்க நாமாவளி' வாசிப்பதற்கு தனித்தனி இயக்கங்களே உண்டு. ஆனால் சிதம்பரம் நகர் என்று பெயர் வைக்கவேண்டும் என்று சொல்ல—அப்படிச் சொல்வது நியாயம் என்று கூற யார் இருக்கிறார்கள் ? எங்கே இருக்கிறார்கள் ?

சென்னை நகர சபை இதைச் செய்யுமா ? செய்யும் அளவுக்கு நெஞ்சுறுதி உண்டா அதற்கு ? அல்லது வருவார்க்கும் போவார்க்கும் வரவேற்புச் சொல்வதோடு தன் கடமை தீர்ந்துவிட்டது என்று அது கருதுகிறதா ? விடை வேண்டும்.

## நானா சொன்னேன்?

நிதி அமைச்சர் கோபாலரெ
யார் தன் சுற்றுப் பயண
நடைபெற்ற ஒரு பொதுக் கூ
தில் குறிப்பிட்டார், உணவு
சீர்பட்டுவிட்டது, பங்கீடு விகி
12 அவுன்சாக உயர்ந்து
என்று. தினசரிகள் இச்
தந்ததும் நாம் களிப்படைந்தே
நம்மைப் போலவே நாட்டு
ளும் களிப்புற்றே இருப்பர்.
ருக் குறை உணவு கொஞ்சம் அ
மாகிறது — மதிப்பிற்குரிய
மந்திரியாரே தகவல் தருகிறா
வீண் பேச்சு அல்ல; பொ
பற்ற யாரோ சிலர், எதையா
சொல்வோம் என்னும் கருத்
சொல்லி வைத்த சொற்றொ
அல்ல; அமைச்சரே கூ
கருத்து; எனவே நம்பக்கூடி
நடக்கக்கூடியது என்று என்
எல்லோரும் மகிழ்ந்தது நியா
தான்.

நியாயந்தான். ஆனால்
மகிழ்ச்சி நீடிக்கவில்லை. உ
அமைச்சர் டாக்டர் டி. எஸ்.
இராஜனை சட்ட மன்ற உறுப்பி
ஒருவர் அடுத்த நாள் கே
கேட்டபோது, இராஜன் கூறி
டார் அந்தத் தகவல் ஆதாரம
தென்று.

"நானா சொன்னேன் உ
பங்கீடு அதிகமாகு மென்
கோபால ரெட்டியார் சொன்
அவர் சொன்னதற்கு
பொறுப்பாளி அல்ல." எ
இராஜன் திட்டமாகத் தெரிவி
விட்டார்.

நாம் கொண்ட மகிழ்ச்சி—
மக்கள் கொண்ட மகிழ்ச்சி
வளவு "அற்பாயுசு" கொண்
யிருக்குமென்று நாம் நினைக்க
யில்லை.

இனியேனும் சென்னை அ
சர்கள் அவரவர்கட்குரிய
யைப் பற்றி மட்டும் பேச
நிதி அமைச்சர் உணவைப் ப
யும், உணவு அமைச்சர் நிதி
யும் பேசும் விபரீதம்தொலைய
தமக்குத் தொடர்பற்ற, தம
தெரியாத, தமக்குத் தெரிய வே
டிய அவசிய மில்லாத,
சொல்லக்கூடாத தகவல்க

கும் மனப் போக்கு மந்திரி
ருந்து விடை பெறட்டும்.
இச் சம்பவம்போல ஆசை
மோசம் செய்யும் அற்புத
கள் இனியேனும் நிகழா
ருக்கட்டும். நம் குறைகள்
ட்டாலும் போகிறது,
த்துக் கொள்வோம் குறை
ஆல் குறைகளைத் தீர்த்து
ம் என்று ஒரு நாளைக்கும்,
றத் தீர்த்தல் முடியாத
என்று மறு நாளைக்கும்
ம் ஏமாற்று வித்தைகள்
பெறுமல் இருக்கட்டும்.
சொன்னேன்'' சம்பவம்
போதும்; இனி வேண்

## ஒரு போர்வாள் !

தசிய விஞ்ஞான ஆராய்ச்
கூடம் டில்லியில் நிறுவப்
ருப்பது முறை அல்ல.
தென்னாட்டில் இருந்திருக்க
டும். தென்னிந்தியாவில்
ஞான வளர்ச்சிக்கு ஏற்ற
முறைகள் இந்திய அரசாங்
னால் வகுக்கப்படவில்லை.
தென்னிந்தியாதான் விஞ்
த் துறையில் மிகவும் பிற்
கடைந்துள்ளது. எனவே
ஞான ஆராய்ச்சி வேலையும்
ஞானிகளைத் தயாரிப்பதற்
நிலையங்களும் தென்னாட்
பெருகுதல் வேண்டும். அறி
கூறுபாடுகளை உணர்வ
ய திறமையும் தகுதியும்
னிந்தியர்களுக்கு நிரம்ப
நான் சொல்கிறேன்,
னிந்தியர்கள் தக்க முறை
ங்களைத் தாங்களே தயார்
து கொண்டால் வடநாட்ட
விஞ்ஞான அறிவு பெறுவ
கத் தெற்கு நோக்கி வரும்
மை மிக விரைவில் நாம்
லாம்.''

தப் பேசியது பெரியார்
சர் சி. வி. இராமன்.

க்கும் தெற்குக்கும் வேறு
ருக்கிறது மிகப் பெருத்த
என்று நாம் பல ஆண்டுக
கூறி வருகிறோம். ஒவ்
துறையிலும் வடநாடு
மேலும் முன்னுக்கு வருவ
ன்னாடு தலைகவிழ்ந்து நிற்
உள்ளது இன்றைய நிலை.

அரசியல் தலைமை நிலையமோ பொருளாதார இயந்திரத்தின் அச்சாணியோ எதுவும் வடநாட்டில்தான் உள்ளது. வடவர்கள் மேலுக்குச் செல்வதும் திராவிடர்கள் கீழுக்கு வீழ்வதுமாக உள்ளனர் என்றால் அதற்குக் காரணம் வடநாட்டவருடைய தகுதியோ திறமையோ அல்ல. இன்றைய அரசாங்க அமைப்பும், அந்த அமைப்பில் வடநாட்டவர்க்குள்ள முக்யத்துவமுமே இந்த உயர்வு தாழ்வுக்குக் காரணம். இந்த இழிநிலை நீங்குதற்குரிய ஒரே வழி திராவிட நாடு திராவிடருக்கே என்பதுதான்.

இந்தத் தாரக மந்திரம்—இந்தப் புதுப் பாதை—இழிவு நீங்குவதற்கான இந்த வழி சர் சி. வி. இராமனுக்குப் பிடிக்குமா—அது தெரியாது நமக்கு.

தென்னாட்டுப் பிரிவினை என்ற இலட்சியத்துக்கு அவர் உடன்படுவாரா—சந்தேகம். நம் தென்னாடு நல்வாழ்வு வாழ, இங்குள்ள குஜராத்திகளின் ஆதிக்கத்திற்குப் "பிரிவுபசாரம்" வாசித்துத் தந்தேயாக வேண்டும் என்னும் முடிபு அவரும் ஒப்புக் கொள்ளும் முடிபு தானா—சொல்வதற்கில்லை.

ஆனால் ஒன்று சொல்கிறார் அவர். விஞ்ஞானத் துறையிலும் வடநாட்டின் கை ஓங்குகிறது தென்னாடு கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்பதை எடுத்துரைக்கிறார் அவர். அவருக்குத் தெரிந்த துறை, விஞ்ஞானம், அவர் அந்தத் துறை பற்றித்தான் பேசுவார், பேச முடியும். வேறு துறைகள் பற்றி அவர் எங்ஙனம் பேச முடியும்?

விஞ்ஞானி சர். சி. வி. இராமன் சொல்கிறார் விஞ்ஞானத் துறையிலும் தென்னிந்தியா பின்னுக்குத் தள்ளப்படுகிறது என்னும் பயங்கரமான உண்மையை.

இந்த ஆபத்தை அவர் உணர்கிறார்-உணர்த்துகிறது அவருடைய தொழில்—ஆகவே உரைக்கிறார். ஆனால் இந்த ஆபத்து தீரும் வழியை அவர் கூறவில்லை. அது அவருடைய தொழிலுமல்ல. ஆகவே கூறினாரில்லை.

சர். சி. வி. இராமன் போன்றவர்கள் சுட்டிக்காட்டும் இந்த ஆபத்துக்களை அழிக்கும் வல்லமை வாய்ந்த ஒரே ஒரு போர்வாள் திராவிடர் கழகத்தினிடம்தான் உள்ளது. அதன் பெயர்தான் திராவிட நாட்டுப் பிரிவினை.

## திராவிட மாணவர் மன்றம்

சென்ற ஞாயிறன்று காலை குடந்தை திராவிட மாணவர் மன்ற 5-ம் ஆண்டு தொடக்க விழா குடந்தை டவுன் ஹாலில் வழக்கறிஞர் முத்து தனபாலர் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மாணவர் இயக்க வளர்ச்சி குறித்துத் தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, தவமணிராசன், ஆர். ஜார்ஜ், மா. இளஞ்செழியன் B. A. (Hon's) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் திருநாவுக்கரசு அண்ணாமலை நகர் சேதியின் உண்மையை விளக்கமாக எடுத்துரைத்தார். செயலாளர் இராமலிங்கம் நன்றி கூறினார்.

## பெரியார் விழா

விடாத மழையின் இடையேயும் குடந்தைத் திராவிடர் மிகச் சிறப்பான முறையில் பெரியார் பிறந்த நாள் ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் 19–10–47 மாலை நடத்தி வைத்தனர். நூற்றுக் கணக்கான கருஞ்சட்டைத் தொண்டர்களும் திரளான பொது மக்களும் கொண்டதோர் பெரிய ஊர்வலத்தை நடிகவேள் எம். ஆர். ராதா குதிரைமீது அமர்ந்து முன் நடத்திச் சென்றார். வழக்கறிஞர் முத்து தனபாலர் தலைமையில் தோழர்கள் மா. இளஞ்செழியன், ஆர். ஜார்ஜ், எஸ். கே. சாமி ஆகியோர் பெரியார் பெருந் தொண்டு குறித்துப் பேசினர்.


## போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

| | உள் நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் ரூ. | 0 1 6 | 0 2 0 |
| ஆண்டு 1-க்கு | 5 0 0 | 6 8 0 |

விவரங்களுக்கு:
போர் வாள்,
147, பவழக்காரத் தெரு, சென்னை.

# பிராமணர் பற்று வடமொழியிடமே

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவுச்சாலை தான் வேண்டும், அதுதான் முறை என்று ஹிந்து பத்திரிகை தூபம் இட்டதும், "பிராமணப் பிள்ளைகளே! தனியாய் இருந்து உண்ணுங்கள்" என்று சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம் தீட்டியதும், பொருள் திரட்டி அனுப்பியதும், தெரியாதா கம்யூனிஸ்ட் தோழருக்கு?

பெங்களூரில் விஞ்ஞானக் கல்லூரி மாணவர்கள் ஒரே பந்தியில் இருந்து உணவு கொள்ள வேண்டும் என்று கல்லூரி முதல்வர்கள் செய்த முடிவினை எதிர்த்து, பிராமண மாணவர்கள் கிளர்ச்சி செய்ததும் "ஹிந்து" அதற்குப் போர் முரசு கொட்டியதும் கம்யூனிஸ்ட் நண்பர் தம் நினைவில் இல்லையா?

"ஒரு பார்ப்பனக் குழந்தை உண்பதை ஒரு சூத்திரக் குழந்தை பார்த்துவிட்டால், அந்தப் பாபத்திறகுக் கழுவாயாக நான் 15 நாள் உண்ணாவிரதம் இருப்பேன்" என்று மன்றமேறிக் கூறிவந்த காலஞ் சென்ற தேசீயத் தலைவர் எம். கே. ஆச்சாரியாருடைய அதே ஆரிய உணர்ச்சிதான் 1947 லும் ஆரிய வட்டாரத்தில் உலவுகிறது என்பதைக் கம்யூனிஸ்ட் நண்பர் அறியாரா?

அறிந்துமா ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டது என்று சமரச ஞானம் பேசுகிறார்! அறிந்துதான் பேசுகிறார் எனில் அந்தோ, அது கொடிது! "மத்திய ஆசியாவிலிருந்து நெடுங் காலத்திற்கு முன்பு புறப்பட்டுச் சென்ற ஆரியக் கூட்டத்தின் ஒரு கிளையே மேற்கு ஐரோப்பாவிலும், மற்றொரு கிளையே சிந்து—கங்கை சமவெளி வரையிலும் குடியேறினர் என்ற காரணங் கொண்டு மேற்கு ஐரோப்பாவிலிருந்து கங்கை நதிக்கரை வரையில் உள்ள நாடு முழுவதும் ஆரிய நாடு என்று கூறினால் பொருந்துமா? பொருந்தாதே! இது போன்ற பொருந்தாக் கூற்றுதான் **பண்டைய திராவிட மக்களை** அடிப்படையாகக் கொண்டு **இன்று** திராவிட இனம் காண முயல்வதும்" என்று விளக்கவுரை பகர்கிறார் நண்பர், மிக்க சிரமப்பட்டு.

மேற்கு ஐரோப்பாவிலும் வட இந்தியாவிலும் வாழும் ஆரிய இனத்தவரோடு, தென்னாட்டுத் திராவிட இனத்தவரை ஒப்பிட்டுக் கூறுதல், இன நூல் முறைப்படி, பெருந்தவறு. வடநாட்டில் ஆரிய இனம் என்று இன்று தனியாக இல்லை. கம்யூனிஸ்டு நண்பரே தன் கட்டுரைத் துவக்கத்தில் கூறுதல்போல, அங்கிருந்த பழந் திராவிடருனும் பின்னே வந்த சாகர்கள், குஷாணர்கள், ஹூணர்கள், மங்கோலியர்கள், அரேபியர்கள், துருக்கியர்கள், பாரசீகர் முதலிய பல இனத்தவருடனும் கலந்துவிட்டனர் ஆரியர். அதுபோலவே மேற்கு ஐரோப்பாவிலும் இன்று தனியானதோர் ஆரிய இனம் வாழவில்லை. பல இனங்கள் ஆரிய இனத்துடன் கலந்துவிட்டன. கலந்ததன் பயனாகப் பலப்பல புது இனங்கள் தோன்றிவிட்டன. ஆரிய இனத்தவர் அங்கெல்லாம் துண்டுபட்டுப் போய் விட்டனர். ஒருவர்க்கொருவர் சம்பந்த மற்று, அடியோடு மாறி விட்டனர், வெவ்வேறு இடங்களில் சிதறி ஆங்காங்குள்ள மக்களோடு கலந்து விட்டனர், பிரிக்க முடியாத வகையில். ஆகவே ஓரளவுக்கு (ஓரளவுக்கு மட்டுமே! முற்றிலும் அல்ல)

ஆரிய இன மூலம் உடைய
மனி, பிரான்சு, இங்கி
ஹிந்துஸ்தான் முதலிய
ஒன்றுபட்ட முன்னணி
க்க முடியாது. அவர்களு
ஒத்த கொள்கையோ,
சியமோ, ஒன்று சேர்வ
தேவையோ கிடையாது.

ஆனால் திராவிடர்
இடத்தில் உள்ளன வி
திற்கும் குமரிக்கும்
பட்ட நிலத்தில் வாழ்கின்
ஒத்த பண்பாடு இருக்
மொழியில் கொஞ்சம் கொ
மாறுதல் உண்டு என்
திராவிட இனத்தவர் ரா
கும் பொதுவான வட
ஆபத்து (Common Dan
அவர்கள் எதிரே இருக்
ஆகவே இருக்கும் இடம்
யாது சிதறிப்போன ஆரிய
த்தை எடுத்துக்காட்டி, "
இனத்திற்கு ஒரு தனி
காணமுடியாது - அது
திராவிட இனத்திற்கும்
நாடு காணமுடியாது" எ
சொல்வது தவறான வாதம்
யூனிஸ்டு நண்பர் கூறிய
வாக்கியங்களில் பக்க
தானால், "அறிவற்றவர்
வாறு பேசுவதில் ஆச்சரிய
ஆனால் பகுத்தறிவு என்ற
கல்லில், ஒவ்வொரு விஷய
யும் உரைத்துப் பார்த்து
பொருள் காணும் உண்மை
யர்கள் இவ்வாறு கூறினால்
வதா சிரிப்பதா என்று
வில்லை!"

பண்டைய திராவிட ம
அடிப்படையாகக் கொ
இன்று திராவிட இனம்
முயலகிறோம் நாம் என்
பர் திருப்பித் திருப்பிக் கூ
சரியல்ல. பண்டைய தி
மக்களை அல்ல—இன்றைய
விட மக்களை—தமிழ் தெ

# ஆரியர் உதாரணம் திராவிடர்க்குப் பொருந்தாது

திராவிட மொழிகளைத்
ந்து மொழிகளாய்
திராவிட மக்களை அடிப்
கக் கொண்டுதான் திரா
ன எழுச்சி இன்று
ள்ளது.

ஜன்று. ஆரியம் முத
த இனங்களின் வர
இந் நாட்டு மண் வளம்
சொல்கிருர் நண்பர்.
சரியல்ல. மற்ற பல
ளைப் பொறுத்தவரை
எப்படி இருந்தாலும்,
இனத்தின் வரவைப்
த்தவரையில் தமிழகம்
நஷ்டமே, இலாபம
நண்பர், தன் கட்டுரை
இன்மேளரிடத்தில் கூறு
ல, "ஆரியர்களுடன
ழி வந்தது. இந்து
ந்தது. சாதிப் பிரிவினை
வந்தன." அப்படி என்
என்ன பொருள்? இந்த
மண் இப் புதுப் புனலால்
பெற்று செழிப்புற்றுச்
ளது என்று பொருள்?
அல்ல. பாழ்பட்டது
பொருள்.

**மக்கள் பின்பற்றும் சமயத்**
**டிப்படையில் அவர்களைப்**
**முயற்சிப்பது நகைப்பிற்**
**கும்.**

கம்யூனிஸ்ட் வெடிக்
ன் இரண்டாவது ஈயத்

ரியப் படாதீர்கள், கம்
தான் கூறியிருக்கிருர்
வாசகங்களை! ஐயமிருந்
சென்ற வாரத்துப் போர்
எடுத்து 4-ம் பக்கம்,
பத்தி, 24 முதல் 28
ள்ள வரிகளை மீண்டும்
ப் பாருங்கள். இதே
வாசகங்கள் அங்குக் காணப்
படும்.

ஆமாம், சமயத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட பாகிஸ்தானை ஆதரித்த கம்யூனிஸ்டுதான் இப்படி எழுதி இருக்கிருர்! இந்திய முஸ்லிம்கள் தனி இனத்தவர் — அதற்குரிய மிக முக்கியமான காரணம் மத வேறுபாடு என்று சொல்லித்தான் ஜனுப் ஜின்ஞு பாகிஸ்தான் கேட்டார். அந்தப் பாகிஸ்தானை ஆதரித்த கம்யூனிஸ்டின் பேனுமுனைான் இன்று திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்க்கிறது! ஆச்சரியம் ஆனல் உண்மை என்ற பட்டியலைச் சேர்ந்ததே இந்த வாசகம். என்ன காரணமோ இந்தத் திடீர் மாறுதலுக்கு? தலைவர் ஜோஷி அன்று அப்படிச் சொன்ஞர் இன்று இப்படிச் சொல்கிருர் என்பது தவிர வேறு காரணம் உண்டா?

சமயத்தின் அடிப்படையில் பாகிஸ்தானைப் பிரிப்பது சரியாஞல் அதே அடிப்படையில் திராவிடஸ்தானைப் பிரிப்பது எப்படித் தவருகும்? நியாயத்திற்கு இரண்டு முகங்கள் உண்டோ? இந்தியக் கம்யூனிசம் இரட்டை நாக்குத் தன்மை வாய்ந்ததோ? நமக்குத் தெரியவில்லை.

ஆனல் ஒன்று. சமயத்தின் அடிப்படையில் அல்ல நாம் திராவிடஸ்தான் கேட்பது. திராவிடரும் ஆரியரும் வட நாட்டவரும் "இந்துக்கள்" என்ற பட்டியலில்தான் சரியாகவோ தப்பாகவோ அடைக்கப் பட்டிருக்

(10-ம் பக்கம் பார்க்க)

அரிய கருத்துக்கள்! அச்சமற்ற எழுத்துக்கள்!
அறிவுரைத் தாக்குதல்கள்! பகுத்தறிவுக் கட்டுரைகள்!
தன்னுணர்வுத் தமிழ்ப் பாட்டுகள் கொண்டது!
தனித் தமிழ்ச் சொல்லோவியங்கள் நிறைந்தது!

**"தமிழ் நிலம்"**

(கிழமை இதழ்)

**31-10-47 முதல் வெள்ளிதோறும் வெளிவரும்.**

**உடனே தேவை!**

தமிழ் நிலம் எங்குமுள்ள ஊர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஓர் இதழுக்கு ஒரு ரூபாயாக முன்பணம் கட்டக்கூடிய முன்பணியாளர்கள் (Agents) உடனே தேவை. தேவையான இதழ்களுக்குரிய முன்பணத்துடன் இன்றே எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தனி இதழ் | 0 | 3 | 0 | ஆண்டுத் தொகை | 9 | 0 | 0 |
| ஆறு திங்களுக்கு | 4 | 12 | 0 | மூன்று திங்களுக்கு | 2 | 10 | 0 |

தமிழ் மக்களே! "தமிழ் நிலம்"
இறையாளராய்ச் சேர்ந்து தமிழ்ப் பணியாற்றுங்கள்.

"தமிழ் நிலம்" பணிமனை
77, நயினியப்பன் தெரு, சென்னை-1.

12-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடோடியும் வந்தாள். என் முகத்தில் தாண்டவமாடிய சந்தேகத்தைக் கண்டு அவளே சொன்னாள். அவள் விருப்பத்திற்கிணங்க அவளுடைய தகப்பனார் கலியாணத்தை நிறுத்தி விட்டாராம். என் உள்ளம் துள்ளி யாடியது. பல எண்ணங்கள் மனதில் தோன்றின. கற்பகத்தின் விருப்பப்படிதானே கலியாணம் நின்றது. ஆகவே அவள் விருப்பப்படிதானே அவளுடைய திருமணம் நடைபெறும்! உல்லாசமாகக் கடற்கரையிலே இரண்டுமணி நேரம் கழிந்த பின் திரும்பினோம். வழியிலே, அதே கோயில். கோயிலை நெருங்கியதும் 'இன்று எனக்கு உள்ளே செல்ல அனுமதி உண்டு. இந்த கோயிலைக் கூட திறந்து விட்டுவிட்டார்களல்லவா, கற்பகம்' என்று கேட்டேன். என்னுடைய பேச்சிலே இருந்த ஏளனத்தை அவள் உணர்ந்தாளோ என்னமோ, ஆனால் "யாருக்கு வேண்டியிருக்கிறது இந்த கோயில்களும் ஆண்டவர்களும்' என்று வெடுக்கென்று பதில் சொன்னாள். அப்பொழுது அவள் முகம் சிவந்தது அச்சிவந்த ரோஜா மலரை உள்ள மகிழ்வுடன் உற்று நோக்கினேன்.

"இதற்குள் வீட்டிற்குப் போய் என்ன செய்யப் போகிறேன்! உங்களுக்குத்தான் என்ன வேலை இருக்கிறது! வாருங்கள், மறுபடியும் கடற்கரைக்குப் போகலாம்." என்று திடீரென கற்பகம் கூறினாள். நான் திடுக்கிட்டேன். என்றாலும் கற்பகத்தின் அன்பழைப்பை மறுக்க அஞ்சி கடலோரம் செல்ல ஒப்பினேன்.

கடற்கரையில் அமர்ந்து கற்கண்டு மொழிகளை ஒருவர்க்கு ஒருவர் பரிமாறிக்கொண்டிருந்தோம். கொஞ்ச நேரம் சென்றதும் கற்பகம், "எனக்கு என்னவோ போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே என் மடிமீது சாய்ந்தாள்.

"கண்ணே! என்ன உடலுக்கு? ஏன் சோர்வுறுகிறாய்? என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று கேட்ட வண்ணம் குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன், நடுங்கினேன். அவள் முகம் சுண்டிச் சோர்ந்து கறுத்துவிட்டிருந்தது.

"என்ன? என்ன? கற்பகம், இது என்ன?" என்று அலறினேன்.

"பெற்றோர் இட்ட கட்டளை—காதலுக்கு அவர்கள் விதித்த தடை—நம் அன்புக்கு அவர்கள் தந்த பரிசு—மரணம்—ஆம்—மரணம்" என்றாள், தயங்கித் தயங்கி.

நஞ்சுண்டு விட்டேன் நான்! அது தன் வேலையைச் செய்கிறது! நீங்கள் — நீங்கள் — என்னை மறந்து விடுங்கள். நான் உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன் — விஷம் குடித்து விட்டேன்.... விஷம் — அதற்கு மேல் அவள் பேசவில்லை. நஞ்சு தன் கடமையைச் செய்து முடித்துவிட்டது.

கற்பகம் மாண்டு விட்டாள். காதல் அவளைப் பலி கொண்டு விட்டது.

அவள் என்னுடன் இவ்வளவு நேரம் கனிவு மொழி பேசும்போதெல்லாம், நாங்கள் இன்பபுரிப் பயணம் செய்ததாக எண்ணினேனே நான், என்ன மதியீனம்! அவள் மரணப் பாதையில் அல்லவோ பயணம் செய்துகொண்டிருந்திருக்கிறாள்!

கற்பகம் என்னை ஏமாற்றி விட்டாள்! அப்பா தன் விருப்பத்திற்கு இணங்கிவிட்ட
பொய் சொல்லி ஏமாற்றி
டாள்! மரண வாயிலின்
அவள் நட்டும் அந்த
நிமிஷம் வரை என்னை ஏ
விட்டாள்.

கற்பகம், என் மடிமீது
பகமா? இல்லை இல்லை!
ளுடைய சவம்! பிணம்!
ரற்ற உடல்!

மறுபடியும் மறுபடியும்
ளைப் பார்த்தேன்; கதறி
கூவினேன்; அரற்றி
அழுதேன்; தேம்பித்
அழுதேன்.

....இல்லை, இனி அழப்
தில்லை, இதோ அவ
அழைக்கிறது; அன்பு
அழைக்கிறது! இருவ
அழைக்கிறது செல்கிறோ
தாயமே! எங்கள் காதல்
கட்டுப் பாட்டை உடை
என்று எண்ணித் தா
அதற்குத் தடை விதி
இதோ நாங்கள் போகி
உன் செங்கோல் இனி
டும். உன் பாழும் கட்
இனி அரசோச்சட்டும்.

---

(9-ம் பக்கத் தொட

கின்றனர், நாம் தனி
கேட்பது அரசியல், பெ
யல், இன இயல், நாட்டு
முதலியவற்றை முன் நீ
வரலாற்றுச் சுவடியை எ
காட்டி! மக்கள் மனப்
மொழி, வாழ்க்கை வழி
நாகரிகம் இமற்றைக்
வடநாடு தென்னாட்டைச்
டும் இயந்திரமாகவே இ
இந்துஸ்தான் சர்க்கா
அமைப்பு உள்ளது என்
காட்டி! வெறும் சமய
காட்டி அல்ல!

[பிற ஈயத்துண்டுகள்
இதழில்.]

(2-ம்பக்கத் தொடர்ச்சி)
டிலே நான் வாழ்வேன்; எனக்கு உரிமையுண்டு' இதைச் சொல்ல முடி ?..........

னல் நான் இப்பொழுது வயெல்லாம் சொல்லிக் ண்டிருந்தால் மூட்டைப் யை நசுக்குவது போலல் நசுக்கி விடுவார்கள். நான் த முடித்த பின்........

த்தைய எண்ணங்களிலே ட நான் சற்று நேரமா நிம்மதியாக இருக்கலா று கடற்கரைக்குச் சென் . தனியான இடம், நிர்மல ஆகாயத்தை அண்ணாந்து தேன். "என் நாட்டிலே, வாழ உரிமை உள்ள நாட் பிறர் கருணையை எதிர் து வாழ்வதா?....ஆ, என் த்தவர் படும்பாடு, ஆதித் டர் படும் இழிவுகள்...." மனம் அலை கடலில் பட்ட பெனத் தத்தளித்தது, மயம் தண்ணீரருகே சில ர்கள் வந்தார்கள். கையி த கட்டையை தண்ணீருக் தூக்கி எறிந்தனர். அலை அலை கழிக்கப்பட்டு கட்டை வும் கரைக்கு வந்தது. யும் கட்டையைத் தூக்கி னர் தண்ணீருக்குள்ளே டைக்கு உயிரிருந்தால் ன்ன பாடுபடும்? ஆதித் டர்களை, சூத்திரர்களை மைய கட்டையென மதித் னே நடத்துகிறது இன் சமூகம்?

சனையிலாழ்ந்த நான் புத் பின் சல சலப்பைக்கேட் ரும்பிப் பார்த்தேன். விழுங்கிவிடுவதுபோல் ம் என்னைப் பார்த்துக் டு நின்று கொண்டிருந் "உட்காரேன்" என்றேன். ால் என் வாயிலிருந்து எப்படி வந்ததோ..........என் காதல் உள்ளம் தான் இதைச் சொல்லியிருக்க வேண்டும்.

என் அருகில் உட்கார்ந்த கற்பகம் சிறிது நேரம் அலை கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு "தினம் நீங்கள் இங்கு வருவதுண்டா?" என்று எங்கள் இருவருக்கு மிடையே யிருந்த அமைதியை கிழித்துக் கொண்டு கேட்டாள். "இல்லை" —இதற்குமேல் பேச என்னால் முடியவில்லை. "நம் எண்ணத்தில்கூட ஒற்றுமை யிருக்கிறதே. நானும் கடற்கரைக்கு வர வேண்டுமென்று வர, நீங்களும் வந்திருக்கிறீர்களே" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பார்த்தாள். "அப்படியா" என்று சொல்லிய வண்ணம் நான் அவளைப் பார்த்தேன். இருவர் கண்களும் சந்தித்தன. திடீரென்று தலையைச் சாய்த்துக் கொண்டாள். நானும் தலையைத் திருப்பிக் கடலை நோக்கினேன். உணர்ச்சி மறுபடியும் அவளைப் பார்க்கத் தூண்டிற்று. திரும்பினேன். அவள் கண்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தன. மறுபடியும் கண்கள் சந்தித்தன. கேட்கவேண்டும் என்று மனதில் வைத்துக்கொண்டு கேட்க முடியாமல் கஷ்டப்பட்ட கற்பகம் கடைசியில் அதைக் கேட்டேவிட்டாள். "நம் உள்ளம் ஒன்றுகிவிட்டதல்லவா......?" இதற்கு நான் என்ன பதில் கூறுவது? என்னைப் பற்றி அவள் அறிவாளா? நான் தாழ்ந்த சாதி என்பதும், நான் தரித்திரன் என்பதும் தெரிந்தால் அவள் என்ன செய்வாள்?

ஆனால்—என் உள்ளம்! நான் தாழ்ந்த சாதியாக இருந்தாலும் தரித்திரனாக இருந்தாலும் எனக்கும் உள்ளம் என்று ஒன்று உண்டல்லவா? கற்பகத்தின் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். என் உள்ளத்தையும் ஒடித்துக்கொண்டு அவளுடைய களிப்பையும் கெடுக்க நான் விரும்பவில்லை. நான் சொன்னேன்: "ஆம், அதில் சந்தேகமென்ன?"

இச் சொற்களைக் கேட்டதும் அவளுடைய முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடிற்று; வெற்றிக் களிப்பிலே மிதந்தாள். ஓரடி தூரத்தில் உட்கார்ந்திருந்தவள் சற்று நெருங்கி உட்கார்ந்தாள். நான் கையை மணலுக்குள் வைத்துக்கொண்டு கடலைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நெருங்கி உட்கார்ந்த கற்பகத்தின் கை அவளை யறியாமல் மணலுக்குள் என் கையைத் தீண்டிற்று. அவளுடைய குளிர்ந்த கரம் பட்டதும் ஓர் உணர்ச்சி என் உடம்பிலே பாய்ந்தது. உணர்ச்சி உலகில் உலவினோம் இருவரும்.

தைரியத்தை யெல்லாம் வரவழைத்துக்கொண்டு "என்னைப் பற்றி உனக்குத் தெரியுமா?!' என்று கேட்டேன். "சகலமும் தெரியும் நாம் இருவரும் தமிழர் தானே. அதில் உங்களுக்குச் சந்தேகமில்லையே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் அக் குறும்புக்காரி, கற்பகம்.

நான் இதையா எதிர்பார்த்தேன்? "என்னைப்பற்றி தெரியுமா" என்று கேட்டதும், அவள் "என்ன" என்று கேட்கவும், "நான் தாழ்ந்த சாதி, தரித்திரன்" என்று நான் கூறவும், அவள் உள்ளம் ஒடிந்து விடும் என்றல்லவா எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக என் விஷயங்களைக் கவனித்து என்னைப்பற்றி யாவும் அறிந்து, எனக்கே புத்தி கற்பிக்க ஆரம்பித்து விட்டாளே!

நான் அவளுடைய கேள்விக்குப் பதில் கூறவில்லை. என்

முகத்தில் தோன்றிய ஆச்சரியமே அவளுக்குப் பதில் கூறியிருக்கும். அவளும் பதிலை எதிர்பார்க்க வில்லையே; குறும்பாகத்தானே உங்களுக்குச் சந்தேகமில்லையே'' என்று கேட்டாள்!

கொஞ்சநேரம் கடலையும் ஒருவரையொருவர் மாறி மாறியும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். சிறிது நேரம் கழிந்தபின் கற்பகமே பேச ஆரம்பித்தாள்; "இன்று என் மனோரதம் நிறைவேறியது. இரண்டாண்டுகளாக உங்களிடம் கேட்க வேண்டும் கேட்க வேண்டும் என்று எண்ணியதை இன்றே கேட்டு வெற்றியும் பெற்றேன்....ஆகவே வழியிலிருக்கும் கோயிலுக்குப் போய் விட்டு போவோமா?''

"கோயில்'' என்றதும், என் உள்ளத்தை யாரோ அமுக்குவது போலிருந்தது. (நான் ஆதித்திராவிடன் அல்லவா?) ஆனாலும் சமாளித்துக்கொண்டு "சரி'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன். கற்பகமும் எழுந்தாள்.

கோயிலை அடையும்வரை மௌனமாகவே சென்றோம். என்னை உள்ளே அனுமதிக்காத கோயிலுக்குள், என் சுற்றத்தார் தீட்டுப்படாமல் அமர்ந்திருக்கும் ஆண்டவனின் திருக்கோயிலுக்குள் கற்பகத்துடன் அழையா விருந்தாளியாக, திருட்டுத்தனமாக நான் உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆகவே கற்பகத்தை மட்டும் போய்வரச் சொன்னேன். அவள் முடியாது என்றாள். கதைத் துவக்கத்தில் கூறியபடி பேச்சு நடந்தது. "நான் தான் வரமுடியாதே'' என்று நான் சொன்னதும் கற்பகத்தின் முகம் சுண்டிவிட்டது. கோபக் கண்களுடன் என்னைப் பார்த்தாள். "இத்தகைய கோயிலுக்குள்ளே என்னையும் போக வேண்டாமென்று தடுக்காமல் நீ மட்டும் போய்வா என்று கூறுகிறீர்களே'' என்று கூறுவதுபோலிருந்தன அவளுடைய கண்கள். வரும் வழியில் வாங்கிய கற்பூரத்தைத் தூக்கி எறிந்தாள். "கற்பகம் கற்பூரத்தை எறியாதே. அது உயர்ந்த பொருள். பல நோய்களைப் போக்கும். யாருக்காவது கொடுத்தால் பிரயோஜனப்படும்'' என்று நான் எப்படிக் கூறுவது? "நான் போகாவிட்டால் யாரிடமாவது கொடுத்து கோயிலுக்குப் போய் கொளுத்துங்கள் என்று சொல்லச்சொல்கிறீர்களா?'' என்று அவள் கேட்டுவிட்டால் என்னசெய்வது? ஆகவே மௌனமாயிருந்தேன். பின்பு பிரிய மனமின்றி அவரவர் வீட்டிற்குச் சென்றோம்.

ஒருவித மாறுதலுமின்றி இரண்டாண்டுகள் ஓடி மறைந்தன; இல்லை, பறந்து சென்றன. பி.ஏ. பரீட்சை எழுதியாகிவிட்டது. நான் பி.ஏ. தேர்வு முடிவு வருவதற்காக காத்துக்கொண்டிருக்கிறேன். வழக்கம்போல் கற்பகமும் நானும் கடற்கரையில் சந்தித்துக்கொண்டு தானிருந்தோம்.

ஆனால் இப்போதுதான் சுமார் பதினைந்து தினங்களாக அவள் கடற்கரைக்கு வருவதில்லை. என் உள்ளம் வாடியது. என்ன காரணம் அல்லது உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டதா என்பது தெரியாமல் தவியாய்த் தவித்தேன். நேற்றைய தினமும் வழக்கம்போல் கடற்கரைக்குச் சென்று, இடிந்த மனதுடன் வீட்டிற்குத் திரும்பினேன். தபால் வந்ததாகக்கூறி என் தாயார் என்னிடம் ஒரு கவரைக் கொடுத்தார்கள். கவரைக் கூர்ந்து கவ
தேன், கவரின்மேல் எழு
விலாசம் கற்பகத்தின் கை
ழுத்து என்பதை உணர்ந்தே
துள்ளிய உள்ளம் தலைப்பி
புக்போஸ்ட் என்ற வார்த்
களைக் கண்டதும் திடுக்கிட்
அவசர அவசரமாக உள்ளிரு
கடிதத்தை எடுத்தேன். பி
தும் பார்த்தேன். அச்சடி
கலர் காகிதம். தலைப்பிலே 'தி
மண அழைப்பிதழ்.' இ
கண்டதும் காகிதத்தின் நடு
பார்த்தேன். 'கற்பகத்திற்கு
என்ற சிவந்த எழுத்து
என் கண்களை, என் உள்ளத்
என் உயிரை உறுத்தின.

உணவு செல்லவில்லை;
வெல்லாம் தூக்கமில்லா
கழித்தேன். அடுத்த ஒ
றன்று கற்பகத்திற்குத் தி
மணம். அழைப்பிதழைப்
முறை படித்தேன். எதற்கா
கற்பகம் எனக்கு அழை
அனுப்பினாள்? உள்ளூரிலி
கும் கற்பகம், தினந்தோ
என்னைச் சந்தித்து வந்த க
கம் என்னிடம் ஒன்றும் கூ
லிருந்துவிட்டு இதைத் தப
மூலம் அனுப்புவானேன்?
கள் நட்பு அவள் பெற்றோ
ளுக்கு தெரிந்து........ அ
வீட்டை விட்டு வெளியேறு
சிறைப்படுத்தி.... அவள் சம்
மின்றி கலியாண ஏற்
செய்து விட்டார்கள் போ
கற்பகம் எனக்கு 'அழைப்
அனுப்ப வேண்டிய காரண
பாவி, நான், என் கடமை
தவறிவிட்டேனே?

உள்ளம் பதறிற்று. இ
தூக்கமின்மையால் கண்
இருண்டன.

அடுத்த நாளும் கடற்க
குச் சென்றேன். கற்பகமும்
திருந்தாள். என்னைக் கண்ட

(10-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliya